**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 27 மார்ச் 2018 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 19 செப்தெம்பர் 2018 இல் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு பராதீனப்படுத்தப்பட்டிராத கூட்டுமொத்தம் ரூபா 50,070,600 பெறுமதியான 22 ஆதனங்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையால் காணி கட்டடங்களின் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த ரூபா 15,872,600 பெறுமதியான 12 வாகனங்கள் சபைக்கு உரித்தற்றதாகக் காணப்பட்டபோதிலும் அவற்றின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டுள்ளமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.3 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
| --- | --- |
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிருவாக விதிகள் அத்தியாயம் II இன் விதி 4 | மீளாய்வாண்டில் சபையினால் ஆதனவரி மதிப்பீடு மற்றும் ஆதனவரி அறவீடு என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்று நிருபம் 29 திசெம்பர் 2016 இன் 30/2016 ஆம் இலக்கம். | கடந்த ஒரு வருடகாலமாக சபையின் 09 வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) அரச நிர்வாக சுற்றிக்கை 26 யூன் 2008 இன் 13/2008 ஆம் இலக்கம். | வாகன ஓட்ட அட்டவணைகள் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னதாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் 07 மார்ச் 2017 இன் PF/01/2017 ஆம் இலக்கம். | பணத்தை அல்லது களஞ்சியப் பொருட்களை பெறுவதற்கு அல்லது அவற்றை கட்டுக்காப்பில் வைப்பதற்கு நிர்வாக ரீதியாகப் பொறுப்பாகவுள்ள அல்லது அதிகாரக் கையளிப்பின் பிரகாரம் குறித்த பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடம் பிணைப்பணம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் ரூபா 10,363,038 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 7,191,680 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வாடகைகள் | 3,625,559 | – | 2,677,922 | 6,266 | 2,302,000 | – | 3,013,593 | 8,450 |
| அனுமதிப் பத்திரக்கட்டணங்கள் | 376,000 | – | 322,999 | - | 347,000 | – | 345,203 | - |
| ஏனைய வருமானம் | 6,769,400 | – | 9,112,957 | 6,418,520 | 6,846,100 | – | 11,400,805 | 6,142,690 |
| | **10,770,959** | | **12,113,878** | **6,424,786** | **9,495,100** | | **14,759,601** | **6,151,140** |

(ஆ) சபையினால் கடந்த 05 ஆண்டுகளுக்கு மேலாக வீதவரி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் வருமானங்கள் பட்டியலிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 362,400 தொகையான முத்திரைக் கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள் மற்றும் பொதுவழிகள் மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரியின் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தலுடன் தொடர்புடையதாகவுள்ள அனைத்து விடையங்களினதும் கட்டுப்பாடு மற்றும் நிர்வாகத்தில் சபை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு உள்ளன.

**செயற்பாடுகளின் செயலாற்றல் தாமதங்கள்**

யா/49 கிராம அலுவலர் பிரிவில் கடைத்தொகுதிகள் நிர்மாணிப்பதற்கென சபைக்கு ஒதுக்கப்பட்ட 0.3572 ஹெக்ரெயர் விஸ்தீரணமுடைய அரச காணியை சபைக்கு பராதீனப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் கடந்த 05 ஆண்டுகளுக்கு மேலாக தாமதமடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்**

சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 21 மனித வளங்களால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

சபைக்குரித்தான 16 மயானங்களில் உடலை தகனம் செய்வதற்கான மயானவரி அறவிடப்பட்டிருக்க கடந்த 05 ஆண்டுகளிற்கு மேலாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரித்தான தேவரதம் படகு 04 வருட காலமாக ஊர்காவற்றுறை துறைமுகப்பகுதியில் பயன்பாடின்றிக் காணப்படுகின்றது.

(ஆ) சபைக்குரித்தான ஊர்காவற்றுறை நவீன சந்தை கடைத்தொகுதியின் மேற்றளப்பகுதியிலுள்ள 03 கடைகள் கடந்த 10 வருடங்களாக பயன்பாடற்ற நிலையிலுள்ளமை அவதானிக்கப்பட்டது

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 36,995 தொடக்கம் ரூபா 2,699,801 அல்லது 46 சதவீதம் தொடக்கம் 78 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 2,064 தொடக்கம் ரூபா 10,996,637 அல்லது 0.39 சதவீதம் தொடக்கம் 29 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| சொத்துக்கள் | நிலையான சொத்து பதிவேடு பராமரிக்கத் தவறியமை. |